
# திராவிடத்தால் வாழ்கிறோம்

941

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

78

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## எதிரிகளைத் திகைக்கச் செய்த வெற்றி!

தி.மு.கழகம் உருவான நாளில் இருந்தே, தமிழ்நாட்டின் ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சியாக செயல்பட்டது என்றாலும், 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில்தான் கழகம் அதிகாரப்பூர்வமான எதிர்கட்சியானது. அந்தத் தேர்தலுக்கு முன்பாக, கோவையில் 1961-ஆம் ஆண்டு டிசம்பர் 16, 17 ஆகிய நாட்களில் தேர்தல் சிறப்பு மாநாட்டைக் கூட்டியது தி.மு.கழகம். முதல் நாள் பொதுக்குழுவும், இரண்டாவது நாள் மாநாடும் நடைபெற்றன.

அழகுற வடிவமைக்கப்பட்ட வாகனத்தில் பேரறிஞர் அண்ணா ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். மாநாட்டுப் பந்தலில் தி.மு. கழகத்தின் இருவண்ணக் கொடியை அண்ணா ஏற்றிவைக்க, நாவலர் நெடுஞ்செழியன் மாநாட்டைத் திறந்துவைத்தார். பின்னர் உடுமலை நாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டில் அண்ணா பேசும்போது, “தொண்டர்களாகிய நீங்கள் கொடுக்கும் ஒத்துழைப்பால், ஆதரவால் உற்சாகத்தில் நான் காரியமாற்றி வருகிறேன். உங்களுடைய திறமையால் ஆற்றலால் எதையும் சாதிக்க முடியும் என்று திடமுடன் நம்புகிறேன். பிப்ரவரி திங்களில் நடைபெறும் தேர்தலில், நாம் நல்ல வெற்றியைக் காண்போம் என்பதில் சந்தேகமில்லை.” என்று உறுதிபடக் கூறினார்.

அப்போது, ராஜாஜியுடனும், கம்யூனிஸ்ட்டுகளுடனும் தி.மு.க. உறவாடிக் கொண்டிருக்கிறது என்று விமர்சனங்கள் பொதுவெளியில் எழுந்து கொண்டிருந்தன. அந்த விமர்சனங்களுக்கு இம்மாநாட்டில் பதிலளித்த அண்ணா, “ஒரு அரசியல் தலைவர், மற்றொரு அரசியல்

ஓவியம் : சிகரன்




தலைவரைப் பார்க்கக்கூடாதா? அப்படிப் பார்த்தால், கருத்துகளை மாற்றிக்கொள்வார்களா? அப்படி நினைப்பது அரசியல் தெரியாத அறிவிலித்தனம். நான் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். சுதந்திரா கட்சியுடனோ, கம்யூனிஸ்ட் கட்சியுடனோ பேச சந்தர்ப்பம் கிடைத்தால் பேசவும் செய்வேன். அப்படிப் பேசுவதால், நம்முடைய இலட்சியத்தை மாற்றிக்கொள்ள மாட்டோம்” என்றார்.

கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்கள், தலைவர்கள், கலைஞர்கள் எனப் பலரும் மாநாட்டில் கலந்துகொண்டனர். மாநாட்டு மேடையிலேயே தேர்தல் அறிக்கையையும் அண்ணா வெளியிட்டார். “அரசியலில் ஜனநாயக உரிமைப் பாதுகாப்பும், பொருளாதாரத் துறையில் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நிலையும், எல்லோருக்கும் நல்வாழ்வும் கிடைத்திடச் சமதர்மமும், சமூகத்துறையில் பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சியும், பேதமற்ற சமூக அமைப்பும் ஏற்படுத்துவதற்கான முறைகளை மேற்கொள்வது என்று தி.மு.கழகம் உறுதிபூண்டு, மக்கள் அதற்கான பக்குவம் பெறும் பணியையும் மேற்கொண்டுள்ளது” என்ற கழகத்தின் குறிக்கோள், கொள்கையுடன் தொடங்கியது அந்தத் தேர்தல் அறிக்கை.

குறிப்பாக, 1957 முதல் 1962 வரையிலான 5 ஆண்டுகாலத்தில் தி.மு.கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அரசிடம் போராடியவை, வலியுறுத்தியவை, மேற்கொண்ட ஆக்கப்பூர்வ பணிகளும் அதில் இடம்பெற்றிருந்தன. விலைவாசி உயர்வு, நில உச்சவரம்பு, உழவர் பிரச்னைகள், மீனவர் பிரச்னை, சீர்திருத்தத் திருமணச் சட்டம் வலியுறுத்தல், இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு, ஆளுநர் பதவிக்கு எதிர்ப்பு, ஊராட்சி மன்றங்களின் அதிகாரத்தை உயர்த்துதல், இலங்கைத் திராவிடர் நிலை, புதிய ரயில் திட்டங்கள் என 15 உறுப்பினர்களின் தலையீடு செய்த பல விவரங்களைப் பட்டியலிட்டது தேர்தல் அறிக்கை.

‘15 உறுப்பினர்களைக் கொண்டே இத்தனை விவகாரங்களைப் பேசியிருக்கிறோம், இன்னும் அதிக உறுப்பினர்கள் இருந்தால் அல்லது ஆட்சியைத் தந்தால், என்னவெல்லாம் செய்வோம் பாருங்கள்’ என்று மக்களுக்கு நம்பிக்கை தருவதாக இருந்தது அந்த அறிக்கை. கூடவே முதற்கட்டமாக, 78 வேட்பாளர்களுக்கான பட்டியலையும் மாநாட்டில் வெளியிட்டார் அண்ணா.

பிப்ரவரியில் தேர்தல் நடைபெற்றது. 50 இடங்களில் வென்று பிரதான எதிர்க்கட்சியானது தி.மு.கழகம். கழகத்தின் வளர்ச்சியும் எழுச்சியும் இன எதிரிகளைத் திகைக்கச் செய்தன.

...கூட்டம் திரளும்




## திராவிடப் பல்கலை.யின் அழைப்பு!

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம் குப்பத்தில் 1997-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது, திராவிடப் பல்கலைக்கழகம். தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் எல்லையில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகத்தில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற திராவிட மொழித் துறைகள் இயங்கி வருகின்றன. மூன்று மாநிலங்களின் உதவியுடன் ஆந்திர அரசு, இந்த பல்கலைக்கழகத்தை நடத்திவருகிறது.

இங்குள்ள பாடத் திட்டங்களில் மாநில வாரியாக மாணவர் சேர்க்கைக்கு ஏற்ப இடஒதுக்கீடும் உள்ளது. தமிழ்ப் பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக்கட்டணம் மட்டுமல்லாமல், விடுதிக் கட்டணம், உணவுக் கட்டணம் ஆகியவற்றை தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்கிறது.

இந்தக் கல்வியாண்டுக்கு முழு கல்வி உதவித் தொகையுடன் எம்.ஏ. (தமிழ்) கற்க, குப்பம் ‘திராவிடப் பல்கலைக்கழகம்’ மாணவர்களை வரவேற்கிறது. 2025- 26 ஆண்டுக்கான எம்.ஏ. தமிழ் பட்ட வகுப்புக்கான மூன்றாம் கட்ட இறுதிச் சேர்க்கை நடைபெறுகிறது. சிறப்பு வகுப்புகள், மொழி பெயர்ப்புப் பயிற்சி, பிற மொழிகள் கற்றிட வாய்ப்பு, யூ.ஜி.சி., ஜே.ஆர்.சி. / நெட் (UGC JRF / NET) போன்ற தேர்வுகளுக்கும் இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ் மாணவர்கள் பேராசிரியர் த.விஷ்ணுகுமாரன் - 94933-71545, பேராசிரியர் க.மாரியப்பன் - 94868-63620 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு உதவிகள் பெறலாம். விண்ணப்பிக்க இறுதி நாள் 04.09.2025 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டைக் கடந்தும் தமிழ் கற்கும் வாய்ப்பு.

## ப்ளாஷ்பேக்



சிவ.ஜெயராஜ்



### “உன் பேச்சு அறச்சீற்றம்யா!”

2013-ஆம் ஆண்டு வாக்கில், கலைஞர் தொலைக்காட்சியில் ஒரு நேரலை நிகழ்ச்சியில், அன்றைய அ.தி.மு.க அரசின் மின்சாரத்துறை ஊழல் குறித்து புள்ளிவிவரங்களுடன் பேசினேன். அதைக்கேட்டு, அன்று மாலையே தானைத் தலைவர் கலைஞர் அவர்கள், வீட்டுக்கு வரவழைத்தார். “உன் பேச்சு அறச்சீற்றம்யா” என வாழ்த்தினார்.” “உங்களிடமிருந்து குடித்த ஞானப்பால் தலைவரே” என நான் பதில் சொன்னபோது, தலைவர் முகத்தில் புன்னகை. அடுத்த நாள் ‘முரசொலி’யில் எழுதிய கட்டுரையில், ‘புள்ளிவிவரப் புலி’ சிவ.ஜெயராஜ் எனக் குறிப்பிட்டு எழுதினார். சாதாரண தொண்டனான என்னை ஒரே நாளில், மகிழ்ச்சியின் உச்சத்துக்குக் கொண்டு சென்றார், தலைவர். தலைவரின் ‘குட்புக்’ கில் இடம்பெற்றது என் வாழ்நாள் பேறு.

**- சிவ.ஜெயராஜ், தலைமைக் கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

78

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## கழகத்தின் டெல்லி அத்தியாயம்!

தமிழ்நாட்டிலிருந்து 2400 கி.மீ தொலைவில் இருந்தாலும், இந்திய ஒன்றியத்தின் அதிகாரமையமாகவும், இந்நாட்டின் தலைநகரமாகவும் திகழ்கிறது டெல்லி. அதிமுக்கிய அரசியல் முடிவுகள் அங்குதான் எடுக்கப்படுகின்றன, அதனால் தான் 1968-ஆம் ஆண்டு இருமொழிக் கொள்கை சட்டத்தை நிறைவேற்றி, இந்தித் திணிப்புக்கு இடமில்லை என்ற நிலையை உருவாக்கிய முதலமைச்சர் அண்ணா “என்னால் ஆனதை நான் செய்துவிட்டேன். இனி டெல்லி தன்னால் ஆனதைப் பார்க்கட்டும்” என்று சட்டமன்றத்தில் முழங்கினார்.

அத்தகைய அதிகாரம் நிரம்பிய டெல்லிக்கு சென்ற முதல் தி.மு.க.காரர் என்ற புகழுக்குரியவர் டெல்லி சம்பத்.

அவர் எழுதிய தன்வரலாற்று நூல் ‘டில்லியில் தி.மு.க., அண்ணா, கலைஞர்- என் பார்வையில்’. 2009-ஆம் ஆண்டு உயிர்மை பதிப்பகம் இந்த நூலை வெளியிட்டது. இந்நூலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அணிந்துரையும், முன்னாள் அமைச்சர் செ.மாதவன் மதிப்புரையும் வழங்கியுள்ளனர். இந்த நூல் அவரது வரலாறாக மட்டுமல்லாமல், டெல்லியில் கழகச் செயல்பாடுகளைப் பேசும் வரலாற்றையும் சுமந்திருக்கிறது.




கல்லூரிக் காலம் தொட்டே, தி.மு.கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர், உணர்வால் கடைசிவரை உடன்பிறப்பாகவே விளங்கியவர், 2013-ஆம் ஆண்டு மறைந்த டெல்லி சம்பத் அவர்கள். டெல்லியில் ஒன்றிய கல்வி அமைச்சகத்தில் சில காலம் பணியாற்றி, பின்னர் தமிழ்நாடு அரசின் முக்கிய விருந்தினர்கள் மாளிகையான தமிழ்நாடு இல்லத்தில் பணியாற்றினார். அதன் காரணமாக, திராவிட இயக்கத் தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பையும் பெற்றார். அந்நேரத்தில் நடைபெற்ற சுவாரசியம் நிரம்பிய சம்பவங்களை எல்லாம் இந்நூலில் அவர் பதிவுசெய்துள்ளார்.

முதன்முதலில், தி.மு.க. சார்பில் மக்களவைக்குச் சென்ற திருவண்ணாமலை தர்மலிங்கம்- ஈ.வி.கே. சம்பத் தொடங்கி டெல்லியைத் தங்களுடைய அறிவுத்திறனால் திரும்பிப் பார்க்க வைத்த பேரறிஞர் அண்ணா- முத்தமிழறிஞர் கலைஞர்- முரசொலி மாறன் வரை, நெருங்கிப் பழகும்போது நடைபெற்ற நிகழ்வுகளை எல்லாம் இந்நூலில் அதிக அளவில் காண முடிகிறது. அரசியலுக்கு அப்பால், நம் தலைவர்கள் கொண்டிருந்த தனிப்பட்ட ஆர்வங்களையும் துல்லியமாக இந்நூலில் பதிவு செய்கிறார் சம்பத்.

அதைப்போலவே தி.மு. கழகத்தில் நடைபெற்ற முதல் இரண்டு பிளவுகளுக்குப் பின்னணியில் டெல்லி இருந்தது என்பதற்கான சான்றுகளையும் இந்நூலில் காண முடிகிறது. இரவு முழுக்க கண் விழித்துப் படிக்கும் பழக்கம் கொண்ட பேரறிஞர் அண்ணா, தமிழ் நாட்டில் ஹார்வர்ட் பல்கலைக்கழகக் கிளையை நிறுவ முயன்ற முரசொலி மாறன், மெட்ராஸ் ஹவுஸை ‘தமிழ்நாடு இல்லம்’ என்று மாற்றி கட்டடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, வழி வகை செய்த கலைஞர் என இதுவரை கேள்வியுறாத பல செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அரசியல்-அதிகாரம்-அந்தரங்கம் என திருப்பும் பக்கங்களில் எல்லாம் வியப்பைக் கொண்டிருக்கும் இந்நூல், தி.மு.கழகத்தின் டெல்லி அத்தியாயத்தை நம் கண் முன் கொண்டு வரும்.

...வாசிப்போம்.

## கருவூலம்

### தேர்தல் நிதி!

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை சந்திக்க, கழகத்தினர் உண்டியல் ஏந்தி, நாடகம் நடத்தி, தேர்தல் நிதியாக நான்கு இலட்சம் ரூபாய் திரட்டினர். இந்தச் சிறு தொகையைக் கொண்டு அரிய கருத்துகள் நிரம்பிய போஸ்டர்களை அச்சடித்து, கூட்டங்கள், ஊர்வலங்கள், கலைநிகழ்ச்சிகளை நடத்தி, தேர்தல் பிரச்சாரத்தில் கழகம் ஈடுபட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131